DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No.3 /2025

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : தங்கக்கொடி | Father's/Husband's Name : | பெரியசாமி |
| Village | : புள்ளிமான்கோம்பை | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.08.2026

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். கடந்த 07.07.2026 ம் தேதி சாட்சி முதல் விசாரணையின்போது 05.08.2020 மற்றும் 05.09.2013 ம் தேதியிட்ட ஆவணங்களை நகல் மட்டும் இருந்ததால், அவை குறியீடு சய்யப்படவில்லை. தற்போது மேற்படி ஆவணங்களின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணங்களை குறியீடு செய்ய பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை இல்லை என்று சொல்லியதால் மேற்படி இரண்டு ஆவணங்களும் கீழ்கண்டவாறு குறியீடு செய்யப்படுகின்றன.

**முதல் விசாரணை :**

| வ.எண் | தேதி | சான்றாவணம் | விபரம் | தன்மை |
|---|---|---|---|---|
| 1. | 05.08.2020 | **வா.சா.ஆ.4** | 05.08.2020 ம்தேதி ஆவண எண்.3263/2020 ன்படி வாதிகளின் தந்தை வாதிகளுக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் | SRO நகல் |
| 2. | 05.09.2013 | **வா.சா.ஆ.5** | 05.09.2013 ம் தேதி ஆவண எண்.4356/2013 ன்படி 1 ம் பிரதிவாதி வகையறாவிடம் கிரையம் பெற்ற கிரைய பத்திரம் | SRO நகல் |

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) எனக்கு எழுத தமிழில் எழுத படிக்கத் தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். வழக்கு விபரம் எனக்கு தெரியும். ஆண்டி மூப்பரும், அழகர் மூப்பரும் அண்ணன் தம்பிகள் என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 6 ஏக்கர் 75 செண்ட் என்றால் 6 ஏக்கர் 76 செண்ட். தாவா சொத்தின் சர்வே எண்.521/1 என்றால் சரிதான். மேற்படி சொத்து பெரியகுளம் வருவாய் வட்டாட்சியர் அவர்களின் செயல் முறை RTR No.361/1979 ன்படி சர்வே எண்.521/1A, 521/1B என்று உட்பிரிவு

செய்யப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.521/1A என்பது 3 ஏக்கர் 13 செண்ட் என்றால் 3 ஏக்கர் 12 செண்ட். சர்வே எண்.521/1B என்பது 3 ஏக்கர் 62 செண்ட் என்றால் சரிதான். சர்வே எண்.521/1A ன் மேல்புறமும், சர்வே எண்.521/1B கீழ்புறமும் உள்ளது என்றால் சரிதான். கடந்த 20.08.1980 க்கு முன்பே ஆண்டிமூப்பர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஆண்டிமூப்பருக்கு தாதமூப்பர், பெரியசாமி மூப்பர் என்ற இரண்டு மக்கள் என்றால் சரிதான்.

2) தாவா சொத்து ஒச்சாமூப்பருக்கு எப்படி பாத்தியப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியும். மேற்படி விபரத்தை எனது அப்பாவும் சொல்லியிருக்கிறார், வில்லங்கச் சான்றிதழை பார்த்தும் தெரிந்து கொண்டேன். கடந்த 1980 ம் ஆண்டு எனது அப்பா கிரையம் வாங்கிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்தால் ஒச்சாமூப்பருக்கு, ஆண்டிமூப்பர் தனது பாகத்தை கிரையம் கொடுத்தார் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். அழகர் மூப்பர் மகன் வெள்ளைசாமி மூப்பர் என்றால் சரிதான். ஆண்டிமூப்பர் ஒச்சாமூப்பருக்கு கிரையம் கொடுத்த போது அழகர்மூப்பர் பாகத்திற்கு மேற்கு என்று குறிப்பிட்டு கிரையம் கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. ஒச்சாமூப்பர் எனது தந்தை பெரியசாமி மற்றும் தாத மூப்பருக்கு கிரையம் கொடுத்த போது வெள்ளைச்சாமி தோட்டத்திற்கு மேற்கு என்று குறிப்பிட்டு கிரையம் கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான்.

3) பெரியகுளம் வருவாய் வட்டாட்சியர் அவர்களின் செயல் முறை RTR No.361/1979 ன்படி சர்வே எண்.521/1A ல் கட்டுப்பட்ட 3 ஏக்கர் 13 செண்ட் நிலத்திற்கு ஆண்டிமூப்பருக்கு பட்டா வழங்க உத்தரவிட்டார் என்றால் சரிதான். சர்வே எண்.521/1B ல் கட்டுப்பட்ட 3 ஏக்கர் 62 செண்ட் நிலத்திற்கு ஆண்டிமூப்பர், ஒச்சாமூப்பர், வெள்ளைச்சாமி மூப்பருக்கு பட்டா வழங்க உத்தரவிட்டார் என்றால் சரிதான். மேற்படி செயல்முறை RTR No.361/1979 உத்தரவு தவறானது என்று ஒச்சாமூப்பர் சார் ஆட்சியரிடம் மனு கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி மனுவை விசாரித்த சார் ஆட்சியர் RTR No.361/1979 ன்படி பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரியல்ல. IA.No.2/2025 என்ற இடைநிலை மனுவில் மேற்படி சார் ஆட்சியர் பிறப்பித்த உத்தரவு எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) மேற்படி சார் ஆட்சியர் உத்தரவிற்கு பிறகு உட்பிரிவுகளை ரத்து செய்து முழு புலமாக ஒச்சாமூப்பர், வெள்ளைச்சாமி மூப்பர் மற்றும் ஆண்டிமூப்பரின் வாரிசுகள் பெயரில் கூட்டுப்பட்டாவாக வைக்க உத்தரவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவின் பேரில் தான் கடந்த 20.08.1980ம் தேதி சர்வே எண்.521/1ஐ மொத்த புலமாக காண்பித்து ஆவண எண்.1554ன்படி எனது தந்தையும், தாதமூப்பரும் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு அவரவர் நிலத்தை அவரவர் அமைதியாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு கடந்த 2012ம் ஆண்டு எங்களுக்கும், பிரதிவாதி வகையறாவிற்கும் சரிபாதி நிலம் இருக்கவேண்டுமென்று சொல்லி தனியார் சர்வேயரை வைத்து அளந்து பரிவர்த்தனை பத்திரம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் நிலச்சேர்க்கை பத்திரம் எழுதி கொண்டோம். அவ்வாறு பிரதிவாதிகளிடமிருந்து எழுதி கொண்ட ஆவணம் தான் வா.சா.ஆ.5 என்றால் சரிதான். அதன்பிறகு அவரவர் நிலத்தை தனியாக அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரியல்ல, அப்போது பிரச்சனை இருந்தது. மேற்படி வா.சா.ஆ.5 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்திற்கான கூட்டுப்பட்டாவில் எனது அப்பா பெயர் சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். 66 செண்ட் நிலத்தை 33 செண்ட் நிலத்திற்காக பெயரை சேர்த்தார்.

5) மேற்படி கூட்டுப்பட்டாவில் பெயர் இருப்பதை பயன்படுத்திக் கொண்டு சர்வே எண்.521/1Bல் தனக்கு நிலம் இருப்பதாகக் கூறி எனது தந்தை 2020ம் ஆண்டில் வா.சா.ஆ.4 தானசெட்டில்மெண்ட் பத்திரம் எனக்கு எழுதி கொடுத்தார் என்றால் 1980ல் கிரைய ஆவணத்தின் அடிப்படையில் எழுதி கொடுத்தார். மேற்படி தானமாக வாங்கி யசொத்தில் பிரதிவாதிகள் அனுபவத்தில் இருப்பதால் தேனி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.191/2020 என்ற வழக்கை விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அதே சொத்திற்கு தேனி மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.235/2023 என்ற பாக வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அதன்பிறகு மேற்படி வா.சா.சஆ.4 ஆவணத்தை 2ம் பிரதிவாதி ரத்து செய்ததை எதிர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரிதான். மேற்படி 3 வழக்குகளிலும் நானும், அழகுமலை, சேகர் தான் வாதிகள் என்றால் சரிதான். மேற்படி 2 வழக்குகளை பற்றி இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6) எனது நிரூபண வாக்குமூலத்தில் 12 வது பாராவில் சொல்லியுள்ள சங்கதிகளை எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிராதில் சொல்லாத விபரங்களை நிரூபண வாக்குமூலத்தில் சொல்ல வேண்டுமானால் நீதிமன்றத்தில் முன் அனுமதி பெற வேண்டுமென்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மாவட்ட பதிவாளருக்கு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை ரத்து செய்ய அதிகாரம் இல்லை என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு பிறப்பித்துள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. உயர்நீதிமன்றத்தில் பிறப்பித்த உத்தரவின் பேரில் எங்களுக்கு தீர்ப்பு வழங்க வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். எனது பெயரில் உள்ள வா.சா.ஆ.4 தான செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று அறிவிக்க கோரி அசல் வழக்கு எண்.191/2020 என்ற வழக்கில் 1ம் பிரதிவாதி எதிர் கோருரிமை மனு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான்.

7) தேனி நீதிமன்றத்தில் நடக்கும் 2 வழக்குகளை பற்றி சொல்லாததாலும், இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரங்களை அந்த வழக்குகளில் கேட்காததால் இந்த வழக்கு இந்நீதிமன்ற ஆள் வரையறைக்குள் வராது என்றால் சரியல்ல. தாவா சொத்து ஒச்சாமூப்பருக்கு பாத்தியப்பட்டது என்று திண்டுக்கல் சார்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் சரிதான். எனது தாத்தா ஆண்டிமூப்பர் தான் ஒச்சாமூப்பருக்கு கிரையம் கொடுத்தார் என்றாலும், அதன் அடிப்படையில் தான் எனது தகப்பனார் கிரையம் வாங்கியிருக்கிறார் என்றாலும், நாங்கள் தவறான ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தில் உரிமை கோருவதால் இந்தவ ழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

1) 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் எங்கள் பெயரில் உள்ள ஆவணத்தை மாவட்ட பதிவாளர் தான் ரத்து செய்துள்ளார் அதனால் தான் அவர் பெயரை தரப்பினராக சேர்த்துள்ளோம். 2ம் பிரதிவாதி பிறப்பித்த உத்தரபு தவறானது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்திருக்கிறோமா என்றால் செய்திருக்கிறோம். நான் சொல்வது போல் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு மூலம் இல்லை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 2, 3

பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால்ச ரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 10.08.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2026.08.10 17:34:24 +0530

District Munsif,

Aundipatti.